**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 154 இன் கீழ்)

C 8110278

1. District மாவட்டம்: சென்னை PS காவல்நிலையம்: V&AC, CC-I Year ஆண்டு: 2020 FIR No. மு.த.அ. எண்: 07/2020/AC CC-I Date நாள்:

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amdt) Act 2018 Sections பிரிவுகள்: Sec 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: —
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல்: 23.11.2020 Date to நாள் வரை: —
Time Period : நேர அளவு Time from நேரம் முதல்: 11.00 hrs Time to நேரம் வரை: —
(b) Information Received at PS Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 23.11.2020 Time நேரம்: 16.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : எழுத்து
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 15 கி.மீ, கிழக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address முகவரி: சுகாதார ஆய்வாளர் அலுவலகம், வார்டு 196 மண்டலம் 15 இஞ்சம்பாக்கம், பெருநகர சென்னை மாநகராட்சி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. ராஜ்சித்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : ராஜ
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 44 yrs
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : இந்தியன்
நாட்டினம்
(e) Passport No. : —
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of issue : —
வழங்கப்பட்ட நாள்
Place of issue : —
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : ஒப்பந்தக்காரர்
தொழில்
(g) Address : பழைய எண் 35/5 புதிய எண் 559 அமைந்திரா நகர், திருவல்லிக்கேணி, சென்னை-5
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. விக்னேஸ்வரன், சுகாதார ஆய்வாளர், வார்டு 196 மண்டலம் 15, இஞ்சம்பாக்கம், பெருநகர சென்னை மாநகராட்சி

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the investigation / Refused investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. நந்தினி

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் T. KANDASAMY
Rank: நிலை Inspector of Police, No. எண் ..........
CCW-I, VTAC,
Chennai-16

அனுப்புநர், ஆர், ரஞ்சித், த/பெ ராஜ் பழைய எண் 35/5 புதிய எண்559 அயோத்தியா நகர், திருவல்லிகேணி, சென்னை-5 பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்புத் துறை, ஆலந்தூர், சென்னை. ஐயா நான் திருவல்லிகேணி அயோத்தியா நகரில் குடியிருந்து வருகிறேன். சென்னை வெட்டுவான்கன்னி கிழக்கு கடற்கரை சாலையில் ஆர்.ஆர் டிரேடிங் கம்பெனி என்ற பெயரில் நிறுவனம் நடத்தி வருகிறேன், சென்னை ஈஞ்சம்பாக்கத்தில் சென்னை மாநகராட்சி மண்டலம் 15 வார்டு 196 உட்பட்ட எரிவாயு எரியூட்டும் தகன மேடை ஒப்பந்த அடிப்படையில் நடத்தி வருகிறேன், இந்த ஒப்பந்தம் ஒரு வருடத்திற்கு மட்டும். கடந்த 2018 முதல் 2019 வரை மற்றும் 2019 முதல் 2020 ஆகிய ஆண்டுகளில் இந்த ஒப்பந்தங்களை செய்து வருகிறேன், நடப்பாண்டாகிய 2020 முதல் 2021 வரை நான் மேற்படி ஒப்பந்தம் எடுத்துள்ளேன், மேற்படி ஈஞ்சம்பாக்கம் மற்றும் அதன் சுற்றி உள்ள பகுதியில் இறந்தவர்கள் உடலை எரியூட்டுவதற்கு இந்த தகன மேடையை பயன்படுத்துவர், ஒரு உடலை எரிப்பதற்கு ரூ.1200 அரசு கட்டணமாக எனக்குத் தரும், இந்த எரிவாயு தகன மேடையில் வேலையாட்களை நியமித்து உடல்களை எரியூட்டி வருகிறேன். இந்த தகன மேடையில் எரியூட்டப்படும் உடல்களின் எண்ணிக்கையை அங்குள்ள பதிவேட்டில் பதிந்து, பின்னர் மூன்று மாதத்திற்கு ஒரு முறை எரியூட்டப்பட்ட உடல்களின் எண்ணிக்கை கணக்கினை எடுத்து அதற்கு பில் தயார் செய்து, மண்டலம் 15 அலுவலகத்தின் தபால் பிரிவில் கொடுப்பேன். பின்னர் மண்டல அலுவலகத்தின் தபால் பிரிவில் இருந்து வார்டு 196 சுகாதார ஆய்வாளர் அலுவலகத்திற்கு சென்று சுகாதார ஆய்வாளரால் தகன மேடை அலுவலகத்தில் உள்ள பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்த்து பில்லை மண்டல 15 அலுவலகத்திற்கு கையொப்பம் செய்து அனுப்புவார், பின்னர் மண்டல அலுவலகம் மூலம் சென்னை மாநகராட்சி அலுவலகம் சென்று எனக்கு பில் பணம் எனது வங்கி கணக்கிற்கு வந்துவிடும், இந்நிலையில் கடந்த

27.09.2020-ம் தேதி 2020ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை உள்ள 73 உடல்கள் எரியூட்டப்பட்டதற்கான ரூ.87,600 மற்றும் 2020ம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூன் வரை உள்ள மாதங்களில் எரியூட்டப்பட்ட 160 உடல்களுக்கான தொகை ரூ,1,92,000 ற்கான பில்களை தயார் செய்து மண்டலம் அலுவலகம் 15ன் தபால் பிரிவு சென்று கொடுத்தேன், சுமார் இரண்டு மாதம் கழித்து மண்டலம் 15 அலுவலகத்தில் உள்ளவர்கள் என்னை அழைத்து வார்டு 196ல் உள்ள சுகாதார ஆய்வாளரிடம் சென்று கையெழுத்து வாங்கி வந்து கொடுக்கச் சொன்னார்கள், அதன்படி நான் கடந்த 2020 அக்டோபர் மாதத்தில் வார்டு 196ல் உள்ள சுகாதார ஆய்வாளர் திரு,விக்னேஷ்வரன் என்பவரை சந்தித்து மேற்படி பில்களை கொடுத்தேன், அவர் அந்த பில்களை பெற்றுக் கொண்டு தனக்கு வேலை இருப்பதாகவும் ஒரு வாரம் கழித்து வரச் சொன்னார், நானும் ஒரு வாரம் பொறுத்து சென்று பார்த்தேன், அவர் என்னை மீண்டும் 10 நாட்கள் கழித்து வரச் சொன்னார், இவ்வாறாக என்னை பலமுறை அலைகழித்தார், இந்நிலையில் 23.11.2020-ம் தேதி காலை சுமார் 11 மணிக்கு அவரது அலுவலகம் சேன்று சுகாதார ஆய்வாளர் திரு,விக்னேஷ்வரனை பார்த்தேன். நான் கொடுத்த நிலுவைத் தொகை பில் சம்மந்தமாக கேட்டதற்கு தனக்கு ரூ.20,000 இலஞ்சமாக கொடுத்தால் தான் இந்த பில்களை கையொப்பம் செய்து மண்டல அலுவலகம் அனுப்புவேன் என்று கூறினார். நான் எதற்காக பணம் தரவேண்டும் என்று கேட்டேன். பணம் தந்தால் தான் பில்களை பாஸ் செய்வேன் என்று கூறினார், என்னால் அவ்வளவு பணம் தர இயலாது என்று கூறினேன், அதற்கு அவர் பணம் தந்தால் வேலை நடக்கும் என்று கண்டிப்புடன் கூறினார், நான் என்னிடம் பணம் இல்லை என்று மீண்டும் கூறினேன். அதற்கு அவர் நாளை ரூ.5000 தாருங்கள் மீதி பணம் பில் பணம் வந்ததும் தாருங்கள் என்று கூறினார், நானும் வேறு வழியில்லாமல் சரி என்று கூறி வந்து விட்டேன். எனக்கு மேற்படி திரு.விக்னேஷ்வரனுக்கு இலஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை. நான் ஈஞ்சம்பாக்கம் எரியூட்டு எரிவாயு தகன மேடையில் எரியூட்டப்பட்ட உடல்களுக்காக நான் சமர்பித்த

பில்களில் சரி பார்த்து கையொப்பம் செய்வதற்கு என்னிடம் இலஞ்சம் கேட்ட திரு,விக்னேஷ்வரன், சுகாதார ஆய்வாளர், வார்டு 196 மண்டலம் 15 என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன், மேற்படி திரு.விக்னேஷ்வரன் லஞ்சப் பணம் ரூ 5000 வைத்துள்ளேன். இப்படிக்கு (ஒப்பம் ஆர்.ரஞ்சித், 23.11.2020). அய்யா, மேற்படி. புகார் மனுவினை 23.11.2020-ம் தேதி 16.00 மணிக்கு பெற்று புகார் மனுமீது ரகசிய விசாரணை செய்து, புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப ஊ.த.க குற்ற எண்.7/AC/2020/CC-1, U/s. 7(a) of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கு 23.11.2020-ம் தேதி 17.00 மணிக்கு என்னால் பதிவு செய்யப்பட்டது. ஒப்பம் தி.கந்தசாமி, காவல் ஆய்வாளர், நகர சிறப்பு பிரிவு-1, ஊ.த.க.துறை, சென்னை-16. மேற்படி முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றினை கனம் முதன்மை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, செங்கல்பட்டு அவர்களுக்கு அனுப்பியும், பிற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், விசாரணை நகலை நான் எடுத்துக்கொண்டேன்.

23/11/2020

INSPECTOR OF POLICE
Vigilance and Anti-Corruption
City Special Unit-I MKN Road,
Alandur, Chennai - 600 016.
(Near St. Thomas Mount Metro Railway Station)